# கவிஞர் இரா.ரவியின் ஹைக்கூ கவிதைகளில் அறச்சிந்தனைகள்

[1]அ. மரியநேசம் & [2]முனைவர் ச. மல்லிகா
முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர் பதிவு எண்: 22212014022009
முதுகலை மற்றும் தமிழாய்வு மையம்
ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி
(மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் அங்கீகாரம் பெற்றது)
mgpN\fgபட்டி, திருநெல்வேலி
[2]நெறியாளர் & துறைத்தலைவர்
முதுகலை மற்றும் தமிழாய்வு மையம்
ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி

**முன்னுரை**

தமிழில் புதுக்கவிதை அலையைத் தொடர்ந்து ஜப்பானிய ஹைக்கூ என்ற குறும்பா வடிவம் வெகு பிரபலம். 19 நூற்றாண்டின் இறுதிலிருந்தும் 20ம் நூற்றாண்டின் முன்பகுதியில் தோன்றியது.இலக்கியம் என்பது வாழ்வின் கண்ணாடி வாழ்க்கையைப் பிரதிபலிப்பது இலக்கியமானால் வாழ்வுக்கு வழிக் காட்டிட வேண்டியது இலக்கியம். இலக்கியத்தில் அற ஒழுக்கத்தை உணர்த்துவது இருவகை ஒன்று நேரடியாக அறம் உணர்த்துவது மற்றோன்று மறைமுக உணர்த்துவது நேரிடையாக உணர்த்தினால் சற்று கடினமாக இருக்கும் அதனால் சான்றோர்கள் மறைமுகமாக அறம் செய்ய விரும்பு என்று ஔவையார் கூறியுள்ளதை ஏற்றுக் கொள்ளலாம். தமிழில் நவீன இலக்கியத்தின் தொடக்கம் என்பது பாரதியிலிருந்து கருதலாம் பாரதி நவீன இலக்கியத்தின் எல்லா வடிவங்களிலும் முன்னெடுப்பு செய்திருக்கிறார்.

பாரதியே தமிழுக்கு ஹைக்கூவை முதன்முதலில் பரிச்சயப்படுத்தியவர். 'பூஸோன்யோ ஸோஹா' ஹோரீ ஆகியோரின் ''ஹொக்கு''(17 அசைப்பாட்டு) மொழிப்பெயர்த்தும் காட்டிருக்கிறார். கவிஞர் இரா ரவியின் ஹைக்கூ கவிதைகளில் அறச்சிந்தனைகளை பாரதியைப் போல எல்லா வடிவங்களிலும் கவிதைகளையும் எழுதி உள்ளார். கவிசாரல் விருதும்இ 2023ல் செம்மல் விருதும் பெற்று இரா.ரவியின் ஹைக்கூ கவிதைகள் வானொலி முதல் இன்டர்நெட் வரையிலும் இடம் பெற்றுள்ளது. மிகையாகாது. மனிதனுக்கு இன்பத்தையும் இன்பம் சார்ந்த அறஒழுக்கநெறிகளையும் உணர்த்தவே இலக்கியத்தின் பண்பாகும். இலக்கியத்தின் மூலமாகவும் இரா.ரவி ஹைக்கூ கவிதைகளின் மூலமாகவும் இன்றைக்கு தேவையான அறங்களை இவ்வாய்வுக்கட்டுரை மூலம் அமைகிறது.

**ஹைக்கூ கவிதைகள் விளக்கம்**

ஹைக்கூ அல்லது கைக்கூ மூன்று வரிகளின் முறையே 5இ7இ5 அசைகள் என 17 அசைகளைக் கொண்டு அமைக்கப் பெறுவது ஹைக்கூ ஆகும். தமிழில் ஐ ூ கூ ஸ்ரீ ஐக்கூ ஐ ஸ்ரீ கடுகு உ ஸ்ரீ உலகம் கடுகு போல சிறிய கவிதை வடிவில் உலகளாவிய கருத்துக்களைச் செறிவுடன் செறிந்து வைக்கப்படும் செப்பு போல் இடம் தரும் கவிதை வடிவம் ஹைக்கூ எனப் பொருள் ஜப்பானிய கவிஞர் பாசோ 17 நூற்றண்டில் மேலும் மெருகூட்டினர். தமிழில் நவீன கவிஞர்கள் அனைவருமே படைத்தலும் கவிஞர் இரா.ரவி ஹைக்கூ கவிதைகளின் மூலம் எளிமையான மூன்றடி வசீகரம் சின்னச்சின்ன மின்தாக்குகள் சொற்செட்டு படிம அழகு ஆழமான உணர்ச்சிக் கொப்பளிப்புடன் பிரபஞ்சத்தின் முழுப்பரிமாணத்தையும் தன்னகத்தே பிரதிபலிக்கும் ஹைக்கூ கவிதைகள் அதே சமுதாயத்தில் ஹைக்கூ கவிதைகள் தொழிற் நுட்பமின்னணுத்துறை விசுவரூபம் போல மண்ணையும் விண்ணையும் அளக்கும் அபார ஆற்றல் கொண்டவை.

**அறம் - விளக்கம்**

'அறு' என்ற வினைச்சொல் அடியாகப் பிறந்ததே 'அறம்' என்னும் சொல். இச்சொல்லுக்கு அறுத்துச் செல், வழியை உண்டாக்கு, உருவாக்கு, துண்டி, வேறுபடுத்து என்ற பலவகைப் பொருள்கள் வழங்கி வருகின்றன. இத்தகைய சொல் ஆராய்ச்சியின் அடிப்படையில் அறம் என்னும் சொல்லிற்கு விளக்கம் மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியே - முழுநிறை வடிவமே அறம் என்று கூறுவர். 'பிறவிதோறும் மனிதனைப் பற்றிக் கொண்டு வரும் தீவினையை அறுத்தெறிவதே அறம்' என்ற ஆன்மீக விளக்கமும் இதற்குத் தரப்படுவதுண்டு. (திருக்குறள் - நீதி இலக்கியம் - பக் 23)

**அன்பு**

உலகத்திலுள்ள மானுடத்தின் உயிர்மை அன்பு ஆகும்.

''அன்பு இல்லாத உயிரினம்
மண்ணில் இருப்பது இல்லை
அன்புக்காக ஏங்காத மனிதன்
இவ்வுலகில் இருந்ததுமில்லை''

மூங்கில் புல்லாங்குழலையும் தேனோடு இன்சுவையும் வந்தடையும் காதோடு கவிதைகளையும் நம்மோடு அறத்தையும் கொண்டது அன்பும் அறமாகும் அன்பைப்பற்றி தெய்வப்புலவர் ஒரு அதிகாரத்தையே எழுதியுள்ளார். அதில்

''அன்பில் வலியது உயர்நிலை அ ஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு.''

(குறள் 80)

அன்புள்ள உடம்பே உயிருள்ள உடம்பாகும் அன்பில்லார் உடம்பு எலும்பைத் தோலால் போர்த்த உயிரற்ற உடம்பாகும் என்று வள்ளுவர் எடுத்துரைக்கிறார்.
கவிஞர் இரா ரவி அன்பின் அடிப்படையை சுட்டிக்காட்டுகிறார்

''அண்ணனை மதிக்கும்
அன்புக்குச் சொந்தக்காரர்
கலாம்''

(ஹைக்கூ முதற்றே உலகு பக் 21)

அன்பு எத்தகைய சிறப்பைப்பெற்றுள்ளதை உணர்த்தியுள்ளார். கவிஞர் ஞானக்கூத்தன் உபதேசம் என்றும் கவிதையில்

''அன்பைத்தவிர வேறொரு செய்தி
விளம்பத்தகுந்தாய் உலகிலே இல்லை''

என்றுள்ளார்.
சண்டால பிட் சுகியில் புத்தர் வாக்குமூலம் பற்றி கவிஞர் சிற்பி கூறுகையில்

''அன்பினில் பிறந்தது உலகம்
அன்பினில் வாழ்வது உலகம்
அன்பே ஆருயீர்ச்சக்தி
அன்பின்றி வாழ்க்கையே இல்லை''

என்றார். பாரதிதாசனும் தூய உள்ளம் அன்புள்ளம் பெரிய உள்ளம் என்றார். பரந்த உலகில் அன்பிற்கு எல்லை என்பதே இல்லை எனலாம் அன்பே பிரதானம் அன்பு ஒருக்காலும்

ஒழியாது திரு மறைவழி மூலம் கூறுகிறது. உலகம் கூட மாறிவிடலாம் அன்பு மாறாத ஒன்றாக இருந்து எந்த எதிர்ப்பு இல்லாமல் அன்பை வெளிப்படுத்தவே அறமாக கருதப்படுகிறது.

**இல்லறம்**

இல்லறம் என்பது கணவனும் மனைவியும் இணைந்து மகிழ்ந்து புரிந்துகொண்ட சிறந்து விளங்குவது இல்லறமாகும்.

"தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

(குறள் 55)

பிற தெய்வத்தைத் தொழாமல் தன கணவனையே தெய்வம் எனத்தொழுது துயில் எழுதுபவள் 'பெய்' என்று சொல்ல மழை பெய்யும்.

"மனமென்னும் பெண்ணே வாழி நீகேளாய்
நின்னொடு வழிநெறியுநன் கறிந்திடேன்"

பாரதியார் கவிதைகள் பெண்களின் வாழ்க்கையை அடிமை நிலையிலிருந்து விடுத்தது உயர்ந்த திசைக்கு கொண்டு சென்றார் பாரதி.

அகநானூறு வரிகளில்

"கடுஞ்சுல் மடப்பிடி தழீஇய வெண்கோட்டு
இமைசால் வேழம் கன்று ஊர்ப்பு இழிதற்ப
பள்ளி கொள்ளும் பனிச்சுரம்"

(அகம் 195 பாடல்)

வலிமைமிக்க யானையின் மனதில் தன் துணை என்ற ஈரம் கசிந்ததை அகப்பாடலில் கூறப்படுகிறது ஆண்யானையும் பெண்யானையும் ஓய்வெடுக்க அதன் மீது யானைக்கன்று ஏறி விளையாடி மகிழ்ந்தது தன் கன்று விளையாடி மகிழ்வதைக் கண்டு பெற்றோர் உறக்கம் கொள்வதாக மாமூலனார் குறிப்பிடுகிறார் அன்பென்னும் குடையின் கீழ் வாழ்வதே இனிய இல்லறத்தின் அறமாகும்.

**ஒழுக்கம்**

உலகப் பொதுமறையாம் திருக்குறளைக் கவிஞர் கைக்கொள்ளாத கவிதைகளே இல்லை எனலாம் எப்பொழுதெல்லாம் குறள் சிந்தனை பிறக்கிறதோ அப்போதெல்லாம் கவிஞர் குரலெடுத்து கவிபாடி விடுகிறார்.

"ஒழுக்கத்தை உயிருக்கு ஒப்பாக உணர்த்திட்ட
குறளுக்கு இணையான நூல் வேறில்லை"

(கவிதை அல்ல விதை ப 11)

மானிடப்பண்பில் உயர்ந்த பண்பாகக் கருதும் ஒருவனுக்கு ஒருத்தி என்ற கோட்டபாட்டை வகுத்து அதன் படி வாழ்வதை ஒழுக்கம் எனலாம்

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்."

(குறள் 131)

ஒருவன் ஒழுக்கம் தவறாமல் நடப்பதை உயிருக்கு மேலாக கருதப்படும் என்று ஒழுக்கமுடைமை அதிகாரத்தில் வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

**மனிதநேயம்**

மனிதநேயம் என்பது ஆண் பெண் வேறுபாடுயின்றி சாதி சமயம் ஏற்ற தாழ்வுகள் எல்லாவற்றிற்கு அப்பாற்பட்டு மனிதனாக வாழ்ந்து காட்டுவதின் வெளிப்படுவது மனிதநேயம். தாகத்திற்கு தண்ணீருக்கு கொடு தேவைக்கு இரத்தம் கொடு அத்தகைய மனிதநேயம் பிறக்கிறது. தண்ணீரில் வண்ணமும் இல்லை இரத்தத்தில் ஏற்றத்தாழ்வு இல்லை என்பதை வலியுறுத்துகிறது இதுவே மனிதநேய அறமாகும். கவிஞர் இரா.ரவி கவிதை வரிகளில்

“தானத்தில் சிறந்த தானம் இரத்த தானம்
தரணியில் உயிர்கள் வாழவுதவும் இரத்த தானம்
சாதி மத பேதமின்றி அனைவரிடமும்
சகோதரத்துவம் வளர்ப்பது இரத்த தானம்”

(வெளிச்ச விதைகள் பக் 135-136)

உலகில் வாழ்வதற்கும் உயிரி வேண்டும் உயிர் வளிக்கொண்ட இரத்தம் அவசியமாக உள்ளது வலியுறுத்தப்படுகிறது.

ஜப்பானிய கவிஞர் தன் வாழ்வில் பிறர்க்கு ஏதேனும் ஓர் வகையில் உதவ வேண்டும் என்கிறதை பாடல் வரிகளில் கூறுகிறார்.

“வாழ்த்துக்கள் இஸ்ஸா
இன்னும் உயிர் வாழ்கிறாய் இவ்வாண்டும்
கொசுக்களுக்கு உணவூட்ட”

(இஸ்ஸா ஜப்பானிய கவிஞர்) நெல்லை சு முத்து ப 17

“இலையுதிர் கொசுக்களே
பாடுங்கள் …. கடியுங்கள் …. நெடுநாளாய்
நான் சாவுக்குத் தயார்”

(ஷிகி ஜப்பானிய சித்தர்)

பிறப்பின் போதே இறப்பின் காலக்கணக்கு எண்ணத்தொடங்கப்பட்டு வருகிறது இறுதிக்காலத்திலும் ஞானோதயம் பிறக்கும் என்பதை குறிப்பிடுகிறார்கள்.

**அரசியல்**

அரசியல் என்பது மக்கள் குழுக்களில் முடிவெடுக்கும் முறையைக் குறிக்கும் சொல். பொதுவாக அரசமைப்புகளின் செயல்பாட்டைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டாலும், அரசியல் என்பது உண்மையில், அலுவலகம், கல்வி, மற்றும் சமய நிறுவனங்கள் உட்பட அனைத்து மனித குழுக்களின் ஊடாடல்களிலும் காணப்படுகின்றது.

“கத்தியின்றி இரத்தமின்றி அன்று
கத்தியுடன் இரத்தத்துடன் இன்று
அரசியல்”

(ஆயிரம் ஹைக்கூ 39ம் பாடல்)

“கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று
வருவது”

(நாமக்கல் கவிஞரின் பாடல்)

கத்தியில்லாமல் இரத்தம் சிந்தாமல் சுதந்திரதைப் பெற அறத்தொடு போராடினார்கள் என்பதை நாமக்கல் கவிஞர் எடுத்துரைக்கிறார். இன்றைய நிலையில் கத்தியில்லாமல் இரத்தமில்லாமல்

அரசியல் செய்ய முடியாது என்பதை கவிஞர் இரா.ரவி வலிமையின் அறத்தை உணர்த்துகிறார்.

''சிங்கம் பசிக்கு யானையையும் கொல்லும்
அரசியல் வாதி பசிக்கு
உண்மையையும் கொல்வர்''

(ஹைக்கூ 82)

சிங்கம் பசித்தால் யானையாக கூட கொன்று சாப்பிடும் அரசியல் வாதிகள் தன்னுடைய சுயநலத்திற்காக உண்மையாக கூட மறைத்து விட்டு பொய்மை மூலமாகக் கொண்டு மெய்ப்பட பேசுவார்கள் என்பதை வலியுறுத்துகிறார் இதனை கவிஞர் எதிர்மறை சிந்தனையாககே கூறினாலாவது அரசியல்வாதிகள் திருந்துவார்கள் என்ற உயரிய நோக்கத்தோடு கூறியுள்ளார். வாய்மையே வெல்லும் என்ற அடிப்படை கருத்தில் கொண்டு அறத்தோடுவாழவேண்டுமென்றும் என்பதை வலியுறுத்தி கூறியுள்ளார்.

**சுற்றுச்சூழல்**

சுற்றுச்சூழல் என்பது நம்மை சுற்றி இருக்கும் இயற்கை சார்ந்த அனைத்தும் சூழல் பஞ்சப்பூதங்களான நிலம்இ நீர்இ காற்றுஇ ஆகாயம்இ நெருப்பு இவற்றுக்கிடையில் வாழும் மனிதர்களையும் சூழலையும் கவிஞர் இரா.ரவி கவிதை வரிகளில் பிரிக்க முடியாது.

''அவளன்பு கிடைக்கவில்லை
எவ்வளவு முயன்றும்
காவிரித்தாய்''

(ஆயிரம் ஹைக்கூ 64 ப எண்)

''மழைக்கு காரணி மரம்
விரும்பி நாளும் பேணிவளர்ப்போம்
மரம் வளர்ப்பு அறம்''

(ஹைக்கூ முதற்றே உலகு ப 131)

''ரசனை மிக்கது
மதிப்பானது
இயற்கை விவசாயம்''

(ஆயிரம் ஹைக்கூ 66 ப எண் )

வேளாண்மை செய்த இடத்தினை சென்று பார்த்தால் எங்கும் பச்சைப்பசையாக நெல்வயல்கள் தென்னைத்தோப்புகள் வாழைத்தோட்டங்கள் கண்களால் கண்டு வியப்படைகிறோம். இதன்மூலம் அறத்தைச் செய்கிறோம் எப்படியெனில் வேதிப்பொருட்களைக் கொண்டு சின்னச்சிறுபூச்சிகளும் உயிரினங்களையும் அழிக்காமல் பாதுகாக்கப்படுகிறது மட்டுமின்றி நமக்கு எந்த தீங்கும் விளையாதபடி இருப்பதால் சுற்றுச்சூழலைப் பேணிக்காப்பதில் அறமாக விளங்குகிறது.
புறநானுற்றுப் பாடல் வரிகளில்

''நீரின்றி அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டிக்கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவெனப்படுவது நிலத்தோடு நீரே
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு

உடம்பும் உயிரும் படைத்திசினோரே''

(புறம் 18-23)

என்பதன் மூலம் இயற்கை சார்ந்து கிடைக்கும் நீரினை உயிராக கருதி பசி நீங்க உணவு கொடுத்தவர்கள் நீர் உடலுக்கு உயிர் போன்றதாகும் நீரும் நிலமும் எடுத்து விளைவுக்கு உதவியவர்கள் உழவுத்தொழில்களில் விவசாய நிலத்தை அடிப்டையாகக் கொண்டு செயல்படுகின்றன அதனால் உயிரும் உடலும் படைத்தளித்து காப்பேன் என்றும் புகழுடையவர்கள் நீரும் நிலமும் என்பதை அறிய முடிகிறது மனிதனின் வாழ்விற்கு வாழ்வாதாரமாக விளங்குவது நிலவளமான இயற்கை விவசாயமாகும். நிலத்தை மட்டுமின்றி சுற்றுசூழலைப் பாதுகாத்தோமென்றால் பிளாஸ்டிக் தவிர்த்தல்இ வேதிக்கொல்லி மற்றும் செயற்கை உரங்கள் தவிர்ப்பதன் மூலம் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதே அறமாகும்.

**முடிவுரை**

இன்றைய காலகட்டத்தில் அறச்சிந்தனைகளோடு வாழ்வதற்கு அன்புஇ ஒழுக்கம்இ இல்லறம்இ மனிதநேயம்இ அரசியல்இ சுற்றுச்சுழல் அனைத்திலும் பொதுவுடைமையிலும் பகுத்தறிவு சிந்தனையும் வளர்த்துக் கொண்டால் தன்னுடைய மகிழ்ச்சியை மறந்து மற்றவர் மகிழ்ச்சியை நாடுவது தான் உண்மையான அறமாகும். செல்வத்துப் பயனே ஈதல் துய்ப்போம் எனில் தப்புன போலவே இரப்போர்க்கு ஈயாது வாழ்வதை விட உயிரை விட விடுதல் மேலானது என்ற அறம் இன்று அனைவரும் கடைபிடிக்க வேண்டிய அறம் ஆகும். அதுமட்டுமின்றி சுற்றுச்சுழலை மாசுபடுவதைத் தடுத்து இருந்தாலும் நாம் ஒவ்வொரும் தனிப்பட்ட முறையில் சுற்றுச்சுழலைப் பேணுவதே அறமாகக் கருதப்படுகிறது என்பதை அறிந்துக்கொள்ளவோம் சிறுதுளிப் பெரு வெள்ளம் என்பது உண்மை. நீரை சிதறாமல் சேகரித்தல் வருவது வளமை குளங்கள்இ ஏரிகள் அணைக்கட்டுகள் அனைத்தையுமே சீர்திருத்தி வைத்துக் கொள்வோமானால் மூன்று தலைமுறைக்கும் பஞ்சமும் வராது வறுமை வராது என்பதை நமக்கு தெள்ள தெளிவாக அனைத்தையும் பாதுகாப்பின் மூலம் அறம் கிடைக்கும் என்பதை அறிய முடிகிறது.

**துணைநூற்பட்டியல்**


1. புலவர் இரா.நாராயணசாமி - திருக்குறள் இனிய உரை
   நியூ புக் ஹவுஸ் லிட்
   41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல்ஸ் எஸ்டேட்
   அம்பத்தூர், சென்னை – 600 050
2. ஞானக்கூத்தன் - உபதேசம் கவிதை நூல்
3. சிற்பி - கவிதை நூல்
4. கவிஞர் இரா.ரவி - வெளிச்ச விதைகள்
   வானதி பதிப்பகம்
   23, தீனதயாளு தெரு
   தி.நகர், சென்னை - 17
5. அகநானூறு பாடல் வரிகள்
6. கவிஞர் இரா.ரவி - ஆயிரம் ஹைக்கூ
   வானதி பதிப்பகம்
   23, தீனதயாளு தெரு
   தி.நகர், சென்னை - 17
7. ராமலிங்கம் பிள்ளை - நாமக்கல் கவிஞர் பாடல்
8. கவிஞர் இரா.ரவி - ஹைக்கூ உலா

அ.மரியநேசம் & முனைவர் ச. மல்லிகா

வானதி பதிப்பகம்
23, தீனதயாளு தெரு,
தி.நகர், சென்னை - 17

9. கவிஞர் இரா.ரவி - ஹைக்கூ முதற்றே உலகு
வானதி பதிப்பகம்
23, தீனதயாளு தெரு,
தி.நகர், சென்னை - 17

10. புறநானூறு - ஒளவை துரைசாமி பிள்ளை
சாரதா பதிப்பகம்,
சென்னை – 600 014